RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை மலர்-4 இதழ்- 266 செப்டம்பர்.27 2025 சனிக்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

## விஜய்யின் நாமக்கல், கரூர் பிரச்சாரம்: நேரம், மக்கள் சந்திப்பு நிகழ்விடம் அறிவிப்பு



சென்னை: செப்.27-

தவெக தலைவர் விஜய் இன்று (செப்.27) நாமக்கல் மற்றும் கரூர் மாவட்டங்களில் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிகளை நடத்தவுள்ள நிலையில், அந்தப் பிரச்சாரங்கள் எந்த இடத்தில் நடைபெறும், எந்த நேரத்தில் நடைபெறும் என்ற அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இது தொடர்பாக தவெக வெளியிட்டுள்ள அறிக்கையில், "விஜய்யின் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி, நாளை (27.09.2025) நாமக்கல் மற்றும் கரூர் மாவட்டங்களில் நடைபெற உள்ளது. நாமக்கல்லில் கே.எஸ். திரையரங்கம் அருகில் காலை 8.45 மணிக்கும், கரூரில், வேலுச்சாமிபுரம் பகுதியில், நண்பகல் 12.00 மணிக்கும் நடைபெறும்." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், நாளை நடைபெற உள்ள மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாட்டாளர் குழுக்கள் விவரமும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தவெக தலைவர் விஜய் கடந்த செப்டம்பர் 13ம் தேதி திருச்சியில் தனது முதல் பிரச்சாரத்தைத் தொடங்கினார். அன்றைய தினம் திருச்சி, அரியலூர், பெரம்பலூரில் மக்கள் சந்திப்புக்கு திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், திருச்சியில் கூட்டம் பெருமளவில் திரண்டதால் அரியலூர் பிரச்சாரத்துக்குப் பின்னர் பெரம்பலூரில் அவரால் மக்களை சந்திக்க இயலவில்லை. அதனைத் தொடர்ந்து கடந்த வாரம் சனிக்கிழமை (செப்.20) அன்று நாகப்பட்டினம், திருவாரூரில் விஜய்யின் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி நடந்தது.

விஜய் தமிழக சுற்றுப்பயணத்தைத் தொடங்கி 4 மாவட்டங்களில் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிகளை நடத்தி முடித்துவிட்டார். அவருக்கான கூட்டம் குறைவில்லாமல் இருப்பது கவனம் பெற்றுள்ளது. அதேவேளையில் அவரது பேச்சு மீது அரசியல் கட்சிகள் பலவும் பல்வேறு விமர்சனங்களையும் முன்வைத்து வருகின்றன.

அதனால் தவெக தொண்டர்கள் பலரும் கரூர், நாமக்கல்லில் அவரின் பேச்சின் மீது எதிர்பார்ப்பை அதிகப்படுத்தியுள்ளதாகத் தெரிகிறது.

# பிஹாரில் 75 லட்சம் பெண்களுக்கு ரூ.10,000 நிதியுதவி

## புதிய திட்டத்தை தொடங்கிவைத்தார் பிரதமர் மோடி



புதுடெல்லி: செப்.27-

பிஹாரில் 75 லட்சம் பெண்களுக்கு முதற்கட்டமாக ரூ.10,000 நிதி உதவி வழங்கும் முதல்வரின் மகளிர் வேலைவாய்ப்புத் திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கிவைத்தார். இத்திட்டத்தின் மூலம் ரூ. 7,500 கோடி பெண்களின் வங்கிக் கணக்குகளில் செலுத்தப்பட்டுள்ளது.

பிஹார் அரசின், 'முதல்வர் மகளிர் வேலைவாய்ப்பு திட்டம்' அம்மாநிலத்தில் இன்று தொடங்கப்பட்டுள்ளது. பிரதமர் நரேந்திர மோடி காணொலி காட்சி வாயிலாக இத்திட்டத்தை தொடங்கிவைத்தார். பாட்னாவில் நடைபெற்ற தொடக்கவிழாவில், முதல்வர் நிதிஷ் குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக மாநிலம் முழுவதும் உள்ள 75 லட்சம் பெண்களின் வங்கிக் கணக்குகளில் ரூ. 10,000 செலுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் இணைந்துள்ள பெண்களுக்கு அதிகபட்சம் ரூ. 2 லட்சம் வரை தொடர்ந்து நிதி உதவி அளிக்கப்படும் என பிஹார் அரசு தெரிவித்துள்ளது.

பெண்கள் தங்களுக்கு கிடைத்துள்ள இந்த நிதியை, விவசாயம், கால்நடை வளர்ப்பு, கைவினைப் பொருட்கள் தயாரிப்பு, தையல், நெசவு, பிற சிறு தொழில்கள் உட்பட தாங்கள் விரும்பும் தொழிலுக்குப் பயன்படுத்திக் கொள்ள முடியும். பெண்களை சுயசார்பு கொண்டவர்களாக மாற்றும் மாநில அரசின் முயற்சியின் ஒரு அங்கமாக இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை தொடங்கிவைத்த பிரதமர் மோடி, பயனாளிகளுடன் கலந்துரையாடினார். அப்போது பிரதமர் மோடி, "பிஹாரின் தாய்மார்கள், சகோதரிகள் மற்றும் மகள்களின் நலனுக்காக இரட்டை இஞ்ஜின் அரசு அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகிறது. அந்த வகையில், இன்று 'முதல்வர் மகளிர் வேலைவாய்ப்பு திட்டத்தை' தொடங்குவது எனக்கு மிகவும் பெருமை அளிக்கிறது.

பெண்களை லட்சாதிபதிகளாக உயர்த்தும் மத்திய அரசின் பிரச்சாரத்துக்கு இந்த திட்டம் புதிய வலிமையை அளித்துள்ளது. பெண்களை மையமாகக் கொண்டு ஒரு அரசாங்கம் கொள்கைகளை வகுக்கும்போது அது சமூகத்தின் பிற பிரிவுகளுக்கும் பயனளிக்கிறது. உதாரணமாக, மத்திய அரசின் வீடுகட்டும் திட்டம் ஏற்படுத்தி உள்ள ஆழமான மாற்றத்தை முழு உலகமும் தற்போது காண்கிறது.

ஆரோக்கியமான பெண்கள், வலுவான குடும்பங்கள் பிரச்சாரமும் ஒரு சிறந்த உதாரணம். இந்த பிரச்சார திட்டத்தின் கீழ், கிராமங்கள் மற்றும் நகரங்களில் 4.5 லட்சத்துக்கும் மேற்பட்ட சுகாதார முகாம்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. ரத்த சோகை, ரத்த அழுத்தம், நீரழிவு, புற்றுநோய் போன்ற கடுமையான நோய்கள் பரிசோதிக்கப்படுகின்றன. பெண்கள் முன்னேறும்போது ஒட்டுமொத்த சமூகமும் முன்னேறும்" என தெரிவித்தார்.

## சீமான் மீது பதியப்பட்ட வழக்கை ரத்து செய்து ஐகோர்ட் உத்தரவு!




சென்னை: செப்.27-

நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் மீது பதியப்பட்ட வழக்கை ரத்து செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2018 ஆம் ஆண்டு சென்னை ஓ.எம். ஆரில் நாம் தமிழர் கட்சி சார்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இந்த பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய அக்கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான், தமிழ் ஈழம், காஷ்மீர் பிரச்சினை, நியூட்ரினோ மற்றும் சேலம் எட்டு வழிச் சாலை திட்டங்கள் குறித்து பேசும் போது மத்திய, மாநில அரசுகளுக்கு எதிராக கருத்துக்களை தெரிவித்திருந்தார்.

சீமானின் பேச்சு கலவரத்தை தூண்டும் வகையில் உள்ளதாக கூறி துணை காவல் ஆய்வாளர் அளித்த புகாரின் அடிப்படையில் சீமான் மீது தரமணி காவல்துறையினர் வழக்கு பதிவு செய்தனர். சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள இந்த வழக்கின் விசாரணைக்கு தடை விதிக்கக்கோரியும், வழக்கை ரத்து செய்யக்கோரியும், சீமான் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு நீதிபதி டி.வி.தமிழ் செல்வி முன்பு விசாரணைக்கு வந்தபோது, சீமான் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் சங்கர், கலவரத்தை தூண்டும் வகையில் சீமான் பேசவில்லை என்றும் உள்நோக்கத்துடன் போடப்பட்ட இந்த வழக்கை ரத்து செய்ய வேண்டும் எனவும் வாதிட்டார். இந்த வாதத்தை ஏற்றுக்கொண்ட நீதிபதி, சீமானுக்கு எதிரான வழக்கை ரத்து செய்து உத்தரவிட்டார்.



## கல்லல் நடராஜபுரத்தில் ராமாயி நினைவு தொடக்கப்பள்ளி கட்டடம் திறப்பு

### அமைச்சர் கேஆர். பெரியகருப்பன், ஒசெ. கல்லல் நெடுஞ்செழியன் பங்கேற்பு

கல்லல் செப்.27

சிவகங்கை மாவட்டம் கல்லல் அருகேயுள்ள நடராஜபுரம் ராமாயி அம்மாள் நினைவு பள்ளி நிர்வாகத்தினரால் கட்டப்பட்ட புதிய கட்டடத்தை தமிழ்நாடு கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்...

இந்த நிகழ்ச்சியில் பள்ளியின் செயலர் டாக்டர் சண்முகம் வரவேற்புரையாற்றினார்.

பள்ளியில் வரலாற்று நிகழ்வுகளை அப்பள்ளியில் படித்த பழைய மாணவர் தேசிய நல்லாசிரியர் விருதுப் பெற்ற கண்ணப்பன் உரை நிகழ்த்தினார். கல்லல் கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் ந. நெடுஞ்செழியன் , பள்ளி முகவாண்மைக்குழு தலைவர் முரு உடையப்பச் செட்டியார் மற்றும் பள்ளி நிர்வாக குழுவினர் கலந்து கொண்டனர். பள்ளி நிர்வாகக் குழு தலைவர் முத்து குமார் நன்றி உரை ஆற்றினார். இந்த நிகழ்ச்சியில் முக்கிய பிரமுகர்கள் உள்ளிட்ட ஊர் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்...

## 2026 தேர்தலில் அமமுக இடம்பெறும் கூட்டணிக்கே வெற்றி: டிடிவி தினகரன்



திருவள்ளூர்: செப்.27-

'வருகிற தமிழக சட்டப்பேரவை தேர்தலில், அமமுக இடம்பெற கூடிய கூட்டணிதான் வெற்றிக்கூட்டணியாக அமையும்' என, அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் தெரிவித்துள்ளார்.

அமமுக சார்பில், தமிழக சட்டப்பேரவை தேர்தல் 2026 ஐ முன்னிட்டு, அம்பத்தூர் சட்டப்பேரவை தொகுதி நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டம் நேற்று மாலை அம்பத்தூரில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. திருவள்ளூர் மத்திய மாவட்ட அமமுக சார்பில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில் அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன், துணை பொதுச்செயலாளர் ஜி. செந்தமிழன், கொள்கை பரப்புச் செயலாளர் சி.ஆர்.சரஸ்வதி, திருவள்ளூர் மத்திய மாவட்ட செயலாளர் எஸ்.வேதாசலம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இதில், 2026 சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு, அம்பத்தூர் சட்டப்பேரவை தொகுதியில் அமமுக சார்பில் மேற்கொள்ளவேண்டிய பணிகள் குறித்து, டி.டி.வி.தினகரன், கட்சி நிர்வாகிகளிடம் விரிவாக எடுத்துரைத்தார்.


இந்த கூட்டத்துக்குப் பிறகு, டிடிவி தினகரன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது: ஒரு கட்சியின் தலைவராக உள்ள பழனிசாமி, இன்னொரு கட்சித் தலைவரை அநாகரீகமாக விமர்சிப்பது அவரின் தரத்தையே காட்டுகிறது. முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் என்னை சந்திக்கவில்லை. வாய்ப்பு கிடைத்தால் சந்திப்பேன்.

பழகுவதற்கு, நட்புக்கு சிறந்த நண்பர் அண்ணாமலை. நாடாளுமன்ற தேர்தலின் போது, அம்மா மக்கள் முன்னேற்றக்கழகம், தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைய அவரின் செயல்பாடுகளும், தன்மையும் தான் காரணம்..வேண்டுமென்றே சிலர், எங்களை அவர் தூண்டிவிடுகிறார் என்ற தவறான கருத்துகளை பரப்புகிறார்கள். இன்னொருவர் தூண்டிவிடவேண்டிய அவசியமோ, இன்னொருவர் தூண்டிவிட்டு, நாங்கள் செயல்படுகிற நிலையோ எங்களுக்கு கிடையாது.

பழனிசாமி மாதிரியான பெரிய பெரிய தலைவர்கள் இப்போது சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார்கள். நாங்கள் ஜனவரிக்கு பிறகுதான் தேர்தல் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளோம். வருகிற தமிழக சட்டப்பேரவை தேர்தலில், அமமுக தலைமையில் கூட்டணி அமைக்கிற எண்ணமில்லை.

ஆனால், அமமுக இடம்பெற கூடிய கூட்டணிதான் வெற்றிக்கூட்டணியாக அமையும். தவெக நிர்வாகிகளுடன் அமமுக நிர்வாகிகள் பேச்சு வார்த்தை நடத்துகிறார்கள் என, சில ஊடகங்களில் செய்தி பார்த்தேன். அதெல்லாம் உண்மையில்லை. நாங்கள் எங்கள் கூட்டணி பற்றி டிசம்பர் மாதத்தில் தெளிவாக அறிவிப்போம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## செப்டம்பர் 27 உலகச் சுற்றுலா தின கொண்டாட்டம்







1980ஆம் ஆண்டிலிருந்து ஐக்கிய நாடு சபை ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 27ஆம் நாள் உலகச் சுற்றுலா தினமாக அங்கீகரித்தது.

"சுற்றுலா மற்றும் நிலையான உருமாற்றம்" என்ற கருப்பொருளில் 2025ஆம் ஆண்டிற்கான உலகச் சுற்றுலா தினம் சிறப்பிக்கப்படுகிறது.

சுற்றுலாவின் முக்கியத்துவம் மற்றும் அதன் சமூகம், கலாச்சாரம் மற்றும் பொருளாதார அரசியல் மதிப்பு குறித்த விழிப்புணர்வை பன்னாட்டு சமூகத்தினரிடையே வளர்ப்பதற்காக ஆண்டுதோறும் உலகச் சுற்றுலா தினம் கொண்டாடப்படுகிறது.

கல்வி மற்றும் திறன்களில் முதலீடு செய்யும் தரமான சுற்றுலா பயிற்சி வழியாக நிலையான உள்கட்டமைப்பில் முதலீடு செய்வதன் வழியாக பசுமை மாற்றத்தை துரிதப்படுத்தல் வழியாக புதுமை தொழில் நுட்பத்தில் முதலீடு செய்வதன் வழியாக சுற்றுலாவின் பணியாளர்களை மேம்படுத்தக்கூடிய தொழில் முனைவோர் வழியாக சுற்றுலா தினத்திற்கு நாம் பங்களிக்க முடியும்.

ஆண்டு முழுவதும் உழைக்கிறோம். உழைத்ததன் பயனைக் குடும்பத்தோடு கொண்டாடுவோம். சுற்றுலா சென்று ஆனந்தம் கொள்வோம். இல்லத்தில் இருப்பவர்களின் முகத்தில் இன்பம், குழந்தைகளின் முகத்தில் குதூகலம், பெரியோர்கள் மற்றும் நண்பர்கள் முகத்தில் பரவசம். ஆம்! சுற்றுலா அனைவருக்கும் ஆனந்தம் தரும். பார்த்து வந்த இடங்களைப் பட்டியல் போட்டு அசைபோட்டுக்கொண்டே அடுத்தடுத்த தினங்களுக்கெல்லாம் அழகாய் செல்லும் மகிழ்ச்சியைக் காண்போம்.

துன்பம், கவலை மறந்து நாம் சுற்றிப் பார்க்கும் பறவை போல சுற்றுலா சென்று நாமும் சுகமாய் வருவோம்.

உலகின் மிகப்பெரிய துறையாக விளங்குவது நம் சுற்றுலாத்துறை தான். மிகப்பெரிய தொழில் சுற்றுலா போக்குவரத்துத்துறை, உணவுத்துறை, இடவசதி, ஓய்வு, கேளிக்கை என ஐந்து துறைகளையும் சார்ந்து விளங்குகிறது.

வளரும் நாடுகளில் மிகப்பெரிய பலம் சுற்றுலா தான்.

பிரெஞ்சு மொழி ஆசிரியரும் சுற்றுலா வழிகாட்டியுமான திரு.மணிகண்டன் சுற்றுலா வழிகாட்டிக்கான மாநில விருது இருமுறை பெற்றுள்ளார். இவர் கூறுகையில்,

தமிழர்களின் பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் உலகளவில் கொண்டு சேர்ப்பது சுற்றுலா சுறைக்கு உண்டு. தமிழகத்தின் பாரம்பரியத்தை அறிந்து கொள்ள உலகம் முழுவதிலிருந்து வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர்.

சிவகங்கை மாவட்டம் முக்கிய சுற்றுலாத்தளமாக பிரமிக்க வைக்கும் செட்டிநாடு வீடுகள், கோவில்கள், கைத்தறி சேலைகள் கைவினைப் பொருட்கள் ஆத்தங்குடி டைல்ஸ் தயாரிப்பு, தமிழர்களின் பெருமை பேசும் கீழடி உட்பட பல சுற்றுலாத் தளங்கள் உண்டு. வரும் விருந்தினர்களை பாரம்பரிய செட்டிநாடு உணவுடன் உபசரிப்பதில் சிறந்து விளங்குகிறது.



# காரமடை ஒன்றியத்துக்குட்பட்ட 3 ஊராட்சிகளுக்கு உங்களுடன் ஸ்டாலின்சிறப்பு திட்ட முகாம்

கோவை, செப்.27-

கோவை மாவட்டம், காரமடை ஒன்றியம், காளம்பாளையம், கெம்மராபாளையம் மற்றும் மருதூர் ஆகிய ஊராட்சிகளின் பொதுமக்களுக்கு "உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்டம் முகாம்" வட்டாட்சியர் ராமராஜ், வட்டார வளர்ச்சி அலுவலர் ரவீந்திரன் தலைமையில் நடைபெற்றது. முகாமிற்கு திமுக மேற்கு ஒன்றிய செயலாளர் சு.சுரேந்திரன், தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் டி.ஆர்.பிரதீப் ஆகியோர் முன்னிலை வகித்து மக்களை வழி நடத்தி ஒருங்கிணைத்தார்கள். முகாமில் திமுக கோவை வடக்கு மாவட்ட செயலாளர் தொ.அ.ரவி, தலைமை செயற்குழு உறுப்பினர் டி.ஆர்.சண்முகசுந்தரம், மாவட்டத் துணைச் செயலாளர் அசோக் பாபு ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்று முகாமை துவக்கி வைத்து சிறப்பித்தார்கள். உடன் வட்டார வளர்ச்சி அலுவலர் சீனிவாசன், ஊராட்சி செயலர்கள் லட்சுமணன், மாலதி, மகாலட்சுமி, நில வருவாய் ஆய்வாளர் ஜெகதீஷ், நில அளவையர் சரண், கிராம நிர்வாக அதிகாரிகள் தேவராஜ், அழகர்சாமி, யாசர் மற்றும் திமுகவினர் ஒன்றிய நிர்வாகிகள் மேடூர் கணேசன், கணேஷ் மூர்த்தி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் இருந்தனர். இதில் பொதுமக்கள் குறிப்பாக பெண்கள் மகளிர் உரிமைத்தொகை பெற்று தர வேண்டி மனுக்களை அதிக அளவில் சமர்ப்பித்தனர். இந்த முகாமில் வருவாய் துறை, சிறப்பு திட்ட செயலாக்கத் துறை, ஊரக வளர்ச்சி துறை உள்ளிட்ட 17 துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் பங்கேற்றனர்.



# தேசிய அளவிலான ஜூனியர் கிக் பாக்ஸிங் போட்டி சிவகங்கை வீரர் சாதனை



சிவகங்கை, செப்.27-

சிவகங்கை மாவட்டம் தேசிய அளவிலான கிக் பாக்ஸிங் போட்டி வாக்கோ இந்தியா சார்பில் இமாச்சல் பிரதேஷ் மாநிலத்தில் பர்மர் யுனிவர்சிட்டியில்,செப்டம்பர் 22முதல் 26 வரை நடைபெற்றது. இதில் 28 மாநிலங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான கிக் பாக்ஸின் வீரர்கள் பங்கேற்றனர், இதில் சிவகங்கை மாவட்ட கிக் பாக்ஸிங் சங்க வீரர்,12 ஆம் வகுப்பு பயிலும் மாணவர் தி.தரணீஷ் தேவன் தமிழ்நாடு அணி சார்பாக களம் இறங்கினார் இதில் தன்னுடைய சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஒடிசா, கேரளா, தெலுங்கானா ஆகிய மூன்று மாநிலங்களை வீழ்த்தி தமிழ்நாட்டிற்கு வெள்ளி பதக்கத்தை வென்று தமிழ்நாட்டிற்கும் சிவகங்கை மண்ணிற்கும் பெருமை சேர்த்துள்ளார் மாணவனின் பயிற்சியாளர் சிவகங்கை மாவட்ட கிக்பாக்ஸிங் சங்க செயலாளர் ச.குணசீலன் தெரிவித்தார், தலைவர் சதீஷ் மற்றும் துணைச் செயலாளர் சித்ரா, பெற்றோர் ஆகியோர் வாழ்த்தினர், மேலும் கிக்பாக்ஸிங் விளையாட்டு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் அங்கீகாரம் பெற்ற விளையாட்டு என்பது குறிப்பிடத்தக்கது.

# கோவை பரூக் ஃபீல்டு மாலில் நேச்சுரல் சிக்னேச்சர் சலூன் துவக்க விழா: நடிகை ஹரிஜா குத்து விளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார்

கோவை, செப்.27-

கோவை புரூக்ஃபீல்டு மாலில் நேச்சுரல் சிக்னேச்சர் சலூன் 866 வது புதிய கிளை திறப்பு விழா நேச்சுரல் சலூன் நிறுவனர் குமாரவேல் தலைமையில் நடைபெற்றது..

விழாவில் நடிகை ஹரிஜா சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு குத்து விளக்கு ஏற்றி புதிய நேச்சுரல் சிக்னேச்சர் சலூன் 866வது கிளையை தொடங்கி வைத்தார்...

விழாவில் புரூக்ஃபீல்டு முதன்மை நிர்வாக அதிகாரி அஸ்வின் நேச்சுரல்ஸ் விபி புகழ் உள்பட பலர் கலந்து கொண்டனர்...



இது குறித்து நேச்சுரல் சலூன் நிறுவனர் குமாரவேல் கூறுகையில் கோவைப்ரூக்ஃபீல்டு மாலில் தொடங்கப்பட்டுள்ள இந்த புதிய கிளை 866 ஆவது கிளையாகும் கொங்கு மண்டலத்தில் மட்டும் 80கும் மேற்பட்ட கிளைகள் உள்ளன.நேச்சுரல் சலூன் வாடிக்கையாளர்களுக்கு தனது சிறந்த சேவையை வழங்குவதில் நாங்கள் பெருமகிழ்ச்சி அடைகிறோம். எங்களது நிறுவனத்தின் வெற்றிக்கு இங்கு பணியாற்றும் ஊழியர்கள் முக்கிய பங்கு வகித்து வருகின்றனர். இங்கு பணியாற்றும் ஒவ்வொருவரும் வாடிக்கையாளர்கள் தான் முக்கியம் என்ற உணர்வோடு பணிபுரிந்து வருவதன் காரணமாக நேச்சுரல் சலூன் சிறந்து விளங்குகிறது.மேலும் விழாக்கால சலுகையாக வாடிக்கையாளர்

களுக்கு சில்வர் கார்டு கோல்டுகார்டு என இரண்டு சலுகை திட்டங்களை அறிமுகப்படுத்தப் பட்டுள் ளது.என்று கூறினார்...

முன்னதாக நிறுவனத்தின் வெற்றிக்கு உறுதுணையாக சிறப்பாக பணியாற்றிய ஊழியர்கள் மற்றும் தூய்மை பணியாளர்களை பாராட்டி கேடயங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

திறப்பு விழாவில் முக்கிய பிரமுகர்கள் ஊழியர்கள் வாடிக்கையாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்...

# பள்ளி / கல்லூரி மாணவர்களுக்குக் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள்

மதுரை, செப்.27-

பள்ளி / கல்லூரி மாணவர்களிடையே பேச்சாற்றலையும், படைப்பாற்றலையும் வளர்க்கும் நோக்கில் தமிழ் வளர்ச்சித்துறை மூலம் ஆண்டுதோறும் மாவட்டம் வாரியாக பள்ளி / கல்லூரி மாணவர்களுக்கான கவிதை, கட்டுரை, பேச்சுப்போட்டிகள் நடத்தப்பெற்று வருகின்றன.

பள்ளி மாணவர்களுக்கான போட்டிகள் வருகின்ற 2025 அக்டோபர் 14 அன்றும், கல்லூரி மாணவர்களுக்கான போட்டிகள் 2025 அக்டோபர் 15 அன்றும் மதுரை உலகத் தமிழ்ச் சங்க வளாகக் கூட்ட அரங்கில் நடத்தப்பெற உள்ளன.

பள்ளி மாணவர்களுக்கான போட்டிகளில் அனைத்து அரசு/ தனியார் / அரசு உதவி பெறும் / பதின்ம பள்ளிகளில் 11, 12ஆம் வகுப்பு பயிலும் மாணவர்கள் மட்டும் பங்கேற்கலாம். ஒரு போட்டிக்கு ஒருவர் வீதம் ஒரு பள்ளியிலிருந்து மொத்தம் 3 மாணவர்கள் பங்கேற்கலாம்.

கல்லூரி மாணவர்களுக்கான போட்டிகளில் அனைத்து அரசு/ தனியார் / அரசு உதவி பெறும் கலைக் கல்லூரிகள் / பொறியியல், வேளாண்மை, மருத்துவக் கல்லூரிகள் / சட்டக்கல்லூரி, பல்தொழில்நுட்பக் கல்லூரிகளின் மாணவர்கள் போட்டிகளில் பங்கேற்கலாம். ஒரு போட்டிக்கு ஒருவர் வீதம் ஒரு கல்லூரியிலிருந்து மொத்தம் 3 மாணவர்கள் பங்கேற்கலாம். .

பள்ளி / கல்லூரி மாணவர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தாங்கள் பயிலும் பள்ளியின் / கல்லூரியின் தலைமையாசிரியர் / முதல்வர் ஒப்பத்துடன் மதுரை மாவட்டத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் அலுவலகத்திற்கு நேரிலோ, அஞ்சல் முலமாகவோ, மின்னஞ்சல் (tamilvalarchimdu@gmail.com) முலமாகவோ 10.10.2025 க்குள் அனுப்பி வைக்க வேண்டும்.

போட்டிகளின் முடிவுகள் உடனடியாக அறிவிக்கப்பட்டு, வெற்றி பெற்ற மாணவர்களுக்கு மதுரை மாவட்ட ஆட்சியர் பரிசுகள் வழங்கவுள்ளார். பள்ளி / கல்லூரி மாணவர்களுக்கான போட்டிகளில் மாவட்ட அளவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு முதல் பரிசு ரூ.10000/ , இரண்டாம் பரிசு ரூ.7000/ , மூன்றாம் பரிசு ரூ.5000/ என்ற வீதத்தில் பரிசுத்தொகைகள் வழங்கப்பட உள்ளன. மாவட்ட அளவிலான போட்டிகளில் முதல் பரிசு பெறும் மாணவர்கள் மட்டும் மாநில அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ளப் பரிந்துரை செய்யப்பெறுவர்.





# பழனி பேருந்து நிலையத்தில் அதிகாரிகளின் அலட்சியத்தால் அல்லல் படும் பெண்கள்

திண்டுக்கல், செப்.27-

திண்டுக்கல் மாவட்டம் பழனி வ உ சி மத்திய பேருந்து நிலையம் தொடர்ந்து தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையில் கடந்த 2010 ஆம் ஆண்டு சிறப்பு அந்தஸ்து பெறப்பட்டு திறப்பு விழா காணப்பட்டன. மேலும் பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கு நாள்தோறும் நாட்டின் பல்வேறு பகுதியில் இருந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பழனி நகருக்கு வருகை தருகின்றனர்..

இந்நிலையில் வ உ சி மத்திய பேருந்து நிலையத்தில் நகராட்சியால் அமைக்கப்பட்ட பொது கழிப்பிடம் தொடர்ந்து மூடப்பட்டு காணப்பட்டு வருகின்றன. மேலும் பேருந்து நிலையத்தில் நகராட்சி சார்பில் டெண்டர் விடப்பட்ட கட்டண கழிப்பறைகள் இதனை சாதகமாக பயன்படுத்தி வசூலில் குவித்து வருகின்றனர். மேலும் பழனி நகராட்சி சார்பில் மூடப்பட்ட பொதுக் கழிப்பிடத்தை மரமரத்து பணி என்ற பெயரில் கடந்த இரண்டு வருட காலமாக நடைபெற்று வருவதால் பெண்கள் குழந்தைகள் மிகவும் சிரமம் அடைந்து வருகின்றனர்.

நகராட்சி அதிகாரிகளின் அலட்சியப் போக்கால் பழனி பேருந்து நிலையத்தில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் குழந்தைகள் சிறுநீர் கழிக்க முடியாமல் அவதிப்பட்டு வருகின்றன. உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் இந்நிகழ்வில் தலையிட்டு பொது கழிப்பிடத்தை திறந்து மக்களின் பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும் என்று சமூக ஆர்வலரும் பொதுமக்களும் வலியுறுத்தி வருகின்றனர்..

# தமிழ்நாடு முதலமைச்சரால் காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கி வைக்கப்பட்டுள்ள "கல்வியில் சிறந்த தமிழ்நாடு"புதுமைப் பெண் மற்றும் தமிழ்ப் புதல்வன் திட்டங்களின் 2025-26ம் கல்வி ஆண்டிற்கான தொடக்க விழாவில், அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் பங்கேற்று சிறப்பித்தார்

சிவகங்கை, செப்.27-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கி வைக்கப்பட்டுள்ள "கல்வியில் சிறந்த தமிழ்நாடு"புதுமைப் பெண் மற்றும் தமிழ்ப் புதல்வன் திட்டங்களின் 2025-26 ம் கல்வி ஆண்டிற்கான தொடக்க விழாவினை முன்னிட்டு, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள், சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடி அழகப்பா பொறியியல் கல்லூரி வளாகத்திலுள்ள முருகப்பா அரங்கில் நடைபெற்ற விழாவில் பங்கேற்று சிறப்பித்தார்.

மாவட்ட அளவிலான இத்தொடக்க விழாவானது, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையிலும், காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ். மாங்குடி அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது.


இவ்விழா குறித்து, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவிக்கையில்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பள்ளிக் கல்வி மற்றும் உயர் கல்வித்துறையில் மாணாக்கர்களுக்கு பயனுள்ள வகையில் எண்ணற்ற திட்டங்களை தமிழகத்தில் தொலை நோக்கு சிந்தனையுடன் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

மாணாக்கர்கள் சிறந்த முறையில் பள்ளிக்கல்வியை பெற்று, உயர்கல்வியினை தொடர்வதற்கான ஆர்வத்தினை ஏற்படுத்திடும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திட்டங்கள் அடிப்படையாக அமைந்து வருகிறது.

அந்தவகையில், அரசுப் பள்ளியில் பயின்று கல்லூரிக்குச் செல்லும் மாணவிகளுக்கு 'புதுமைப் பெண்' என்கிற திட்டத்தின்கீழும், மாணவர்களுக்கு 'தமிழ்ப் புதல்வன்' என்கிற திட்டத்தின் கீழும் மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது.





அரசு பள்ளியில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயின்று உயர் கல்வி பயிலும் மாணவிகள் பாடப்புத்தகங்கள், பொது அறிவு நூல்கள் மற்றும் இதழ்களை வாங்கி அவர்களது கல்வியை மெருகேற்றிட உதவும் வகையில் மாதந்தோறும் ரூ.1000/ வழங்கும் *புதுமைப்பெண் திட்டமானது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கடந்த 05.09.2022 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. புதுமைப்பெண் திட்டத்தில் கீழ் பயன்பெறும் மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000/ அவர்களது வங்கி கணக்கில் நேரடியாக செலுத்தப்படுகிறது.

அதனைத் தொடர்ந்து 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை அரசு பள்ளிகளில் படித்து உயர்கல்வி பயிலும் மாணவர்களும் பயன்பெறும் வகையில் மாதந்தோறும் ரூ.1000/ வழங்கும் *தமிழ்ப் புதல்வன் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கடந்த 10.09.2024 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. தமிழ்ப்புதல்வன் திட்டத்தில் கீழ் பயன்பெறும் மாணவர்களுக்கும் மாதந்தோறும் ரூ.1000/ அவர்களது வங்கி கணக்கில் நேரடியாக செலுத்தப்பட்டு வருகிறது.

அதனைத்தொடர்ந்து அடுத்த கட்டமாக அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ 1000/ வழங்கும் *புதுமைப் பெண் விரிவாக்கத் திட்டத்தினையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த 30.12.2024 அன்று தொடங்கி வைத்தார்கள்.

அதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், 202526 கல்வி ஆண்டிற்கான "புதுமைப்பெண் தமிழ்ப் புதல்வன்" திட்டங்களின் தொடக்க விழாவானது இன்றைய தினம் சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

கல்வியில் சிறந்த தமிழ்நாடு என்னும் கருப்பொருளில் தமிழ்நாட்டில் மாபெரும் கல்வி எழுச்சியினை கொண்டாடும் இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக மாண்புமிகு தெலுங்கான முதலமைச்சர் திரு.அ.ரேவந்த் ரெட்டி அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்கள்.

சிவகங்கை மாவட்டத்தில் தமிழ்ப் புதல்வன் திட்டத்தில் 58 கல்லூரிகளில் 4302 மாணவர்களும் மற்றும் புதுமைப்பெண் திட்டத்தில் 63 கல்லூரிகளில் 5507 மாணவிகளும் தற்போது பயன் பெற்று வருகின்றனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 202526 கல்வி ஆண்டிற்கான "புதுமைப்பெண் தமிழ்ப் புதல்வன்" திட்டங்களின் தொடக்கவிழாவினை தொடர்ந்து, சிவகங்கை மாவட்டத்தில் தற்பொழுது கூடுதலாக 20252026 கல்வியாண்டில் தமிழ்ப் புதல்வன் திட்டத்தில் 58 கல்லூரிகளில் பயிலும் 2315 மாணவர்களும் மற்றும் புதுமைப்பெண் திட்டத்தில் 63 கல்லூரிகளில் பயிலும் 2835 மாணவிகள் இத்திட்டத்தின் கீழ் பயன் பெறவுள்ளனர்.

ஆகமொத்தம் தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் கீழ் 6688 மாணவர்களும் மற்றும் புதுமைப் பெண் திட்டத்தின் கீழ் 8322 மாணவிகள் பயன் பெறுகிறார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்து மாணவர்களின் பெற்றோர்களாக இருந்து, அவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் வழங்கி, குறிப்பாக உயர்கல்வி கற்பதில் தமிழகம் முதன்மை மாநிலமாக திகழ்கின்ற வகையில், நாளுக்குநாள் பல்வேறு புதிய திட்டங்களை செயல் படுத்தி வருகிறார்கள். அத்திட்டங்களின் பயன்களை மாணாக்கர்கள் பயன்படுத்திக் கொண்டு, நல்லமுறையில் பயின்று, வீட்டிற்கும் நாட்டிற்கும் பெருமை சேர்த்திட வேண்டும் என மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.கேஆர். பெரியகருப்பன் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், காரைக்குடி மாநகராட்சி மேயர் திரு.சே. முத்துத்துரை, மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ். செல்வசுரபி அவர்கள், தேவகோட்டை சார் ஆட்சியர் திரு. ஆயுஷ் வெங்கட் வட்ஸ், இ.ஆ.ப., அவர்கள், துணை மேயர் திரு.நா.குணசேகரன், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி சு.ரதிதேவி, காரைக்குடி வட்டாட்சியர் திரு.ராஜா மற்றும் கல்லூரி பேராசிரியர்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# சிவகங்கை மாவட்டம்: முதலமைச்சரின் அன்புக் கரங்கள் திட்டத்தின் கீழ் பயனடைந்து வரும் குழந்தைகளின் பாதுகாவலர்கள், தமிழ்நாடு முதலமைச்சருக்குமனம் நெகிழ நன்றி தெரிவித்தனர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நாளுக்கு நாள் பல்வேறு புதிய திட்டங்களை அறிவித்து பொதுமக்களை பயன்பெற செய்து வருகிறார்கள். அவ்வாறாக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் அனைத்தும் நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு அடிப்படையாக திகழ்ந்து வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தற்போது, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் "அன்புக் கரங்கள்" திட்டமானது, கடந்த 15.09.2025 அன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் வாயிலாக, தமிழகம் முழுவதும் 6,052 பெற்றோர்களை இழந்த குழந்தைகள் / பெற்றோர்களில் ஒருவரை இழந்த குழந்தைகள் ஆகியோர் 18 வயது வரையில் மாதம் ரூபாய் 2,000/ அவர்களது வங்கி கணக்கில் செலுத்தப்படும் வகையில், இத்திட்டமானது தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், மிகவும் வறிய நிலையில் உள்ள குடும்பங்களில், தங்கள் இரண்டு பெற்றோரையும் இழந்து, உறவினர்களின் பாதுகாப்பில் குழந்தைகள் வளர்ந்து வருவதை அறிந்து, அக்குழந்தைகளை அரவணைத்து தொடர்ந்து பாதுகாத்திடும் வகையில்,





அவர்களது பள்ளிப் படிப்பு வரை இடைநிற்றல் இன்றி அவர்கள் கல்வியைத் தொடர, 18 வயது வரை மாதம் ரூபாய் 2,000/ அவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்பட்டு, அதற்கான அடையாள அட்டைகளும்



2,000/ உதவித்தொகை வழங்குவதோடு மட்டுமல்லாமல், பள்ளிப்படிப்பு முடித்தவுடன் கல்லூரிக் கல்வி மற்றும் உரிய திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளும் வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, சிவகங்கை மாவட்டத்தில் "அன்புக் கரங்கள்" திட்டத்தின் கீழ் 144 குழந்தைகளுக்கு மாதம் ரூபாய் அக்குழந்தைகளின் உறவினர்கள் / பாதுகாவலர்கள் வழங்கும் நிகழ்வு மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களால் மேற்கண்ட தினத்தன்று தொடங்கி வைக்கப்பட்டது.

முதலமைச்சரின் அன்புக் கரங்கள் திட்டத்தின் கீழ் பயனடைந்த குழந்தைகளின் பாதுகாவளர் திருமதி.




மாரியம்மாள் (வடக்கு சந்தணூர்) அவர்கள் தெரிவிக்கையில்,

என் பெயர் திருமதி. மாரியம்மாள், நான் இளையான்குடி வட்டம், வடக்கு சந்தணூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். கடந்த 5 ஆண்டுகளுக்கு முன் எனது



மகள் மற்றும் மறுமகன் ஆகிய இருவரும் விபத்தில் இறந்துவிட்டனர்.

அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். அக்குழந்தைகளான எனது பேரன் மற்றும் பேத்தியை, தாய்வழி பாட்டியான நான் வளர்த்து வருகிறேன். அக்குழந்தைகளை படிக்க வைப்பதில் மிகவும் சிரமப்பட்டு வந்தேன். இச்சூழ்நிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த அன்புகரங்கள் திட்டம் மூலம் எனது பேரன் பேத்திக்கு மாதம் ரூ.2000/ வழங்குவது எனக்கு மிகவும் பேருதவியாக உள்ளது. அவர்களின் 18 வயது வரை மாதந்தோறும் ரூ.2000/ தொகை இத்திட்டத்தின் வாயிலாக வழங்கப்படும் என தெரிவித்துள்ளனர்.

பெற்றோரை இழந்த எனது பேரன் பேத்திக்கும், அவர்களை பராமரித்து வரும் எனக்கும், மாதந்தோறும் பொருளாதார ரீதியாக உதவிடும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இத்திட்டத்தினை செயல்படுத்தியுள்ளார்கள். குழந்தைகளின் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு, இதுபோன்ற திட்டங்களை செயல்படுத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நாங்கள் வாழ்நாள் நன்றி கடன் பட்டுள்ளோம் என குழந்தைகளின் பாதுகாவலர் திருமதி. மாரியம்மாள் அவர்கள் தெரிவித்தார்.

முதலமைச்சரின் அன்புக் கரங்கள் திட்டத்தின் கீழ் பயனடைந்த குழந்தைகளின் பாதுகாவளர் திருமதி. ரேவதி (திருப்புவனம்) அவர்கள் தெரிவிக்கையில்,

என்பெயர் திருமதி ரேவதி நான் திருப்புவனம் வட்டம், நயினார் பேட்டை கிராமத்தை சேர்ந்தவர்.

கடந்த 6 மாதங்களுக்கு




முன் எனது கணவரின் தம்பி மற்றும் தம்பியின் மனைவி ஆகிய இருவரும் குடும்ப பிரச்சனையின் காரணமாக இறந்து விட்டனர். அவர்களுக்கு மூன்று குழந்தைகள் உள்ளனர். எனக்கும் 2 குழந்தைகள் உள்ளது.

தற்போது எனது கணவரின் தம்பி குழந்தைகளாகிய மூன்று குழந்தைகளையும் எங்களது அரவணைப்பில் பாதுகாத்து வருகிறோம். எனது இரண்டு குழந்தைகளையும் சேர்த்து மொத்தம் ஐந்து குழந்தைகளையும் படிக்க வைக்க வேண்டிய சூழ்நிலையில் இருந்தோம். இச்சூழ்நிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள அன்புகரங்கள் திட்டத்தின் மூலம் எனது கணவரின் தம்பி குழந்தைகளான அம்மூன்று குழந்தைகளுக்கும் மாதந்தோறும் ரூ.2000/ வழங்குவது எங்களுக்கு மிகவும் உதவியாக உள்ளது.

குழந்தைகளின் கல்வியானது, எக்காரணத்தைக் கொண்டும் தடையாக கூடாது என்பதை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கருத்தில் கொண்டு, இதுபோன்ற திட்டங்களை செயல்படுத்தியுள்ளார்கள். 18 வயது வரை மாதம் ரூபாய் 2,000/ உதவித்தொகை வழங்குவதோடு மட்டுமல்லாமல், பள்ளிப்படிப்பு முடித்தவுடன் கல்லூரிக் கல்வி மற்றும் உரிய திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளும் வழங்கிட வழிவகை ஏற்படுத்தியுள்ளார்கள். பெற்றோர்களை இழந்த அக்குழந்தைகளுக்கு, பெற்றோர்களின் நிலையிலிருந்து அனைத்தையும் செய்து வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எங்களின் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம் என திருமதி. ரேவதி அவர்கள் தெரிவித்தார்.

**தொகுப்பு: மு.ராஜசெல்வன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், சிவகங்கை மாவட்டம்.**



## கல்லூரி மாணவ மாணவியர்களுக்கான மாபெரும் சிறப்பு கல்வி கடன் முகாமில் ரூ.2.85 கோடி மதிப்பில் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது

கன்னியாகுமரி, செப்.27-

கன்னியாகுமரி மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட முன்னோடி வங்கி இணைந்து மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரி கலையரங்கில் மாபெரும் சிறப்பு கல்வி கடன் முகாம் 25.09.2025 அன்று நடைபெற்றது.

நமது கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆறு கட்டமாக ஒன்பது வட்டார அலுவலகத்திற்கு உட்பட கல்லூரி மாணவ மாணவிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி மாபெரும் கல்விக்கடன் முகாம் நடத்த முடிவுசெய்யப்பட்டது. அதனடிப் படையில் முதல்கட்டமாக பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி கோணத்தில் 10.09.2025 அன்று நடைபெற்றது. மேற்படி முகாமில் கல்லூரிகளிலிருந்து சுமார் 145 மாணவமாணவிகள் கலந்துகொண்டனர். முகாமில் 28 மாணவ மாணவிகள் றிவி வித்யாலட்சுமி இணைய த்தளத்தில் கல்விக்கடன் விண்ணப்பம் செய்தார்கள். 12 வங்கிகளிலிருந்து வங்கி மேலாளர்கள் கலந்து கொண்டு ரூ.1.42 கோடி அளவில் கடன் ஆணை வழங்கப்பட்டது.

இரண்டவது கல்விக்கடன் மேளா கருங்கல் பெத்லகேம் பொறியியல் கல்லூரியில் 18.09.2025 அன்று நடைபெற்றது. முகாமில் 10 கல்லூரிகளிலிருந்து சுமார் 136 மாணவமாணவிகள் கலந்துகொண்டனர். முகாமில் 50 மாணவ மாணவிகள் றிவி வித்யாலட்சுமி இணையத்தளத்தில் கல்விக்கடன் விண்ணப்பம் செய்தார்கள். 17 வங்கிகளிலிருந்து வங்கி மேலாளர்கள் கலந்துகொண்டு ரூ.1.87 கோடி அளவில் கடன் ஆணை வழங்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக மூன்றாவது கல்விக்கடன் மேளா 25.09.2025 அன்று மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரியில் வைத்து நடைபெற்றது. இந்த கல்விக்கடன் மேளாவில் நடைபெற்றது மேளாவை கல்லூரி முதல்வர் முனைவர்.HT அவர்கள் தொடங்கி வைத்தார்கள். கல்வியின் முக்கியத்துவம் கல்விக்கடன் பெறுவதின் அவசியம் நாம் வங்கியை தேடிச்சென்ற காலம் போய் வங்கிகள் நம்மைத்தேடிவந்து கல்விக்கடன் வழங்க முன்வந்துள்ளது. எனவே மாணவ மாணவிகள் இந்த முகாமை சிறப்பாக பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. முகாமில் 10 கல்லூரிகளிலிருந்து சுமார் 72 மாணவ மாணவிகள் கலந்துகொண்டனர். முகாமில் 35 மாணவிகள் PM மாணவ கல்விக்கடன் வித்யாலட்சுமி இணையத் தளத்தில் விண்ணப்பம் செய்தார்கள். 15 வங்கிகளிலிருந்து வங்கி மேலாளர்கள் கலந்துகொண்டு ரூ.2.85 கோடி மதிப்பில் கடன் ஆணை வழங்கப்பட்டது.

தொடர்ந்து நான்காவது கல்விக்கடன் மேளா 10.10.2025 அன்று சுங்கான்கடை புனித சேவியர் கத்தோலிக் பொறியியல் கல்லூரியில் வைத்து நடைபெறவுள்ளது. இந்த கல்விக்கடன் மேளாவில் மாவட்டத்தில் பல்வேறு பகுதியியல் உள்ள கல்லூரி மாணவ மாணவிகள் கலந்து கொண்டு பயனடைய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

நடைபெற்ற முகாமில் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு.செல்வராஜ், மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரி முதல்வர் முனைவர்.பிஜி, துறை அலுவலர்கள், வங்கியாளர், மாணவ மாணவியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.



## தாம்பரம் மாநகராட்சி 1வது மண்டலம் மாமன்ற கூட்டம் நடைபெற்றது

பம்மல், செப்.27-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி 1வது மண்டலம் மாமன்ற கூட்டம் 1வது மண்டலம் குழுத் தலைவர் பம்மல் தெற்கு பகுதி கழக செயலாளர் வே.கருணாநிதி அவர்கள் தலைமையில் நடைப்பெற்றது.

இக்கூட்டத்தில் உதவி ஆணையாளர் சொர்ணலதா, மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் சத்தியசீலன், மாமன்ற உறுப்பினர்கள் இரா.நரேஷ்கண்ணா, ஆ.மதினாபேகம், ஜெ.சண்முகசுந்தரி, கலைவாணி பிரபு, வாணிஸ்ரீ விஜயகுமார், சித்ரா தமிழ்குமரன், கல்யாணி டில்லி, மு.இன்பசேகர், ரம்யா சத்தியபிரபு, சத்யா மதியழகன், சித்ராதேவி முரளிதரன், மண்டல கண்காணிப்பாளர்,பொதுப்பணி மேற்பார்வையாளர்கள், சுகாதார அலுவலர் மற்றும் மண்டல பணியாளர்கள் கலந்துகொண்டனர்



## கோயமுத்தூருக்கும் (காரைக்குடி வழியில்) தூத்துக்குடிக்கும் இரயிலை நீட்டிப்பு செய்ய வேண்டும்

காரைக்குடி, செப்.27-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி தொழில் வணிகக்கழகத் தலைவர் சாமி திராவிடமணி பங்கேற்று உரையில் கூறியதாவது: 1) கோவை முதல் திருச்சிக்கு பகலில் வரும் "பாலக்காடு எக்ஸ்பிரஸ் ரயிலை காரைக்குடி (அ) இராமேசுவரத்திற்கும், (2) திருச்சி முதல் காரைக்குடிவழியில் விருதுநகர் போகும் பாசஞ்சர் ரயிலை தூத்துக்குடிக்கும் நீட்டிப்பு செய்ய வேண்டும். (3) திருவாரூர், காரைக்குடி சிவகங்கை, மானாமதுரை வழியில் மதுரைக்கு புதிய பாசஞ்சர் ரயில் இயக்க வேண்டும். (4) இராமேசுவரத்திலிருந்து காரைக்குடி, திருவாரூர் வழியாக சென்னைக்கு பகல் நேரம் விரைவு ரயில் இயக்கப்பட வேண்டும். (5) காரைக்குடியிலிருந்து மயிலாடு துறைக்கு பல ஆண்டுகளாக சென்றுவந்த பாசஞ்சர் ரயிலை மீண்டும் இயக்கப்பட வேண்டும். (6) இராமேசுவரம் - சென்னைக்குப்போகும் (எண்: 16752/16751) "போட்மெயில் "வண்டியில் தற்போது முன்பதிவு டிக்கட்டுகளுக்கு வழங்கப்பட்டுள்ள பொது ஒதுக்கீடு (ஜெனரல் கோட்டா) முறை தொடர்ந்து இருக்க வேண்டும். எந்த காரணம் கொண்டு ரத்து செய்யக்கூடாது என்ற கோரிக்கை வலியுறுத்தி பேசினார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளினை சிறப்பிக்கின்ற வகையில்,

## பள்ளி மாணாக்கர்களுக்கு வருகின்ற 27.09.2025 அன்று மாவட்ட அளவிலான அண்ணா மிதிவண்டி போட்டிகள் நடைபெறவுள்ளது

### மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, செப்.27-

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளை சிறப்பிக்கும் வண்ணம், ஆண்டு தோறும் செப்டம்பர் மாதம் தமிழக விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலம் மாவட்ட அளவிலான விரைவு சைக்கிள் போட்டிகள் பள்ளி மாணவ / மாணவியர்களுக்கு நடத்தப்பட்டு வருகிறது.

அதேபோல் இவ்வாண்டும், அறிஞர் அண்ணா பிறந்த தினத்தை முன்னிட்டு, அறிஞர் அண்ணா மிதி வண்டிப் போட்டிகள், மாவட்டத்தின் சார்பாக வருகின்ற 27.09.2025 (சனிக்கிழமை) அன்று காலை 7.00 மணியளவில் வேலுநாச்சியார் அரண் மனை வாயிலில் தொடங்கி நடைபெறவுள்ளது.

அதில், 13 வயதிற் குட்பட்ட மாணவர்களுக்கு 15கி.மீ தூரமும், 13 வயதிற்குட்பட்ட மாணவியர் களுக்கு 10கி.மீ தூரமும், 15 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கு 20கி.மீ தூரமும், 15 வயதிற்குட்பட்ட மாணவியர்களுக்கு 15 கி.மீ தூரமும், 17 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கு 20 கி.மீ தூரமும், 17 வயதிற்குட்பட்ட மாணவியர்களுக்கு 15 கி.மீ தூரமும் என மிதிவண்டி போட்டிகள் மேற்கண்ட பிரிவுகளின் படி நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு பிரிவிலும் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக தலா ரூ. 5000/ மும், இரண்டாம் பரிசாக தலா ரூ. 3000/ மும், மூன்றாம் பரிசாக தலா ரூ. 2000/ மும் மற்றும் 6 பிரிவுகளிலும் 4 முதல் 10 இடங்களில் வருபவர் களுக்கு தலா ரூ.250/ பரிசுத் தொகை மற்றும் சான்றிதழ் வழங்கப்படும். போட்டிகளின் போது தக்க பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இதில், எதிர்பாராமல் ஏற்படும் விபத்துகளுக்கு இவ்வலுவலகம் பொறுப்பேற்காது.

மேலும், போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவ / மாணவிகள் தங்களது பள்ளி தலைமை ஆசிரியரிடமிருந்து (Bonafide Certificate) வயதுச் சான்றிதழ் பெற்று வர வேண்டும். சொந்த மிதிவண்டி (சைக்கிள்) கொண்டு வர வேண்டும். இப்போட்டிகளில் பங்கேற்க இந்தியாவில் தயாரான சாதாரன மிதி வண்டிகள் மட்டுமே பயன்படுத்துதல் வேண்டும். இப்போட்டியில் Gear cycle and race cycle பயன்படுத்த அனுமதி இல்லை.

போட்டிகளில் வெற்றி பெறும் வீரர்/ வீராங்கனைகளுக்கு பரிசுத் தொகையினை, காசோலையாகவோ அல்லது வங்கி மாற்று வழி மூலமோ மட்டுமே வழங்கப்படும் என்பதால், போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவ/மாணவியர்கள் தங்களுடைய வங்கி கணக்கு புத்தக நகலினையும், ஆதார் நகலினையும் கொண்டு வர வேண்டும்.

எனவே, போட்டியில் கலந்து கொள்ள விருப்பமுள்ள மாணவ/ மாணவிகள் மேற்குறிப்பிட்டுள்ள விதிமுறைகளை பின்பற்றி, வருகின்ற 27.09.2025 (சனிக்கிழமை) அன்று காலை 7.00 மணிக்கு அரண்மனை வாசல் முன்பு வருகை தரவேண்டும். கூடுதல் விபரங்களுக்கு மாவட்ட விளையாட்டு அலுவலர் அவர்களை 7401703503 என்ற அலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு விபரங்கள் பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

## மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் செய்தி குறிப்பில் தெரிவித்ததாவது

இராமநாதபுரம், செப்.27-

இராமநாதபுரம் மாவட்டத்தில் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு பெற்ற 800 தொழிலாளர்களுக்கு (கட்டுமான வேலை, கம்பி வளைப்பு வேலை, தச்சு வேலை, மின்பணியாளர் வேலை, பிளம்பர், வெல்டர், வர்ணம் பூசுதல், ஏசி மெக்கானிக், கண்ணாடி அறுத்தல், சலவைக்கல் ஒட்டுதல்) 7 நாட்கள் இலவச திறன் மேம்பாட்டுப் பயிற்சி இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் அளிக்கப்படவுள்ளது.

எனவே கட்டுமான துறையின் மேற்காணும் பிரிவில் பணிபுரியும் பதிவு செய்யாத தொழிலாளர்கள் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்து இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. பயிற்சியில் நாள் ஒன்றுக்கு ஊக்கத்தொகை ரூ.800, மதிய உணவு மற்றும் பயிற்சியின் முடிவில் அரசுச் சான்றிதழ் வழங்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன்,இ.ஆ.ப., அவர்கள் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

மாலை தந்தி

சனிக்கிழமை 27.9.2025



# உலகப் புகழ் பெற்ற வேலூர் கோட்டை வளாகத்தில், தூய்மை பாரத இயக்கத்தின் சார்பில் தூய்மைப் பணி குறித்து விழிப்புணர்வு

## வேலூர் பாரத் கல்வி குழும பள்ளி கல்லூரி மாணவ மாணவிகள் பங்கேற்பு

வேலூர், செப்.27-

வேலூர் மாவட்டம், வேலூர் கோட்டை புற்மை தான வளாகம், உலகப் புகழ் பெற்ற வேலூர் கோட்டை வளாகத்தில், தூய்மை பாரத இயக்கத்தின் சார்பில் தூய்மைப் பணி விழிப்புணர்வு, வரலாற்று சிறப்புமிக்க இடங்கள் மற்றும் பொது இடங்களை தூய்மையாக பராமரிப்பது குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு பேரணி மற்றும் தூய்மை பணிகளை மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் வேலூர் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், தொல்லியல் கண்காணிப்பாளர் டாக்டர். சுஷாந்த்குமார், தொல்லியல் தோட்டக்கலை உதவியாளர் பிரசாத், வட்டாட்சியர் வடிவேலன், வடக்கு காவல் ஆய்வாளர் சீனிவாசன், பாரத் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி தாளாளரும், பாரத் கல்வி குழும தலைவரும், வேலூர் ரெட் கிராஸ் அமைப்பின்

மாநில கிளை நிர்வாக குழுவிற்கு மாவட்ட பிரதிநிதியுமான முனைவர். சி.இந்திரநாத் மற்றும் பாரத் மெட்ரிகுலேஷன் பள்ளி மாணவ, மாணவிகள் ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகத்தால் உலகின் சிறந்த 2% விஞ்ஞானிகளில் மூன்று கிரசென்ட் நிறுவன ஆசிரிய உறுப்பினர்கள் தரவரிசைப்படுத்தப்பட்டனர்




வண்டலூர், செப்.27-

செங்கல்பட்டு மாவட்டம் வண்டலூரில் உள்ள பி.எஸ்.அப்துர் ரஹ்மான் கிரசண்ட் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம், உயிரியல் அறிவியல் துறையைச் சேர்ந்த மூன்று ஆசிரியர்கள் ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகம் வெளியிட்ட உலகின் முன்னணி 2% விஞ்ஞானிகள் பட்டியலில் இடம் பெற்றுள்ளதை பெருமையாகக் கொண்டாடுகிறது..

பல்கலைக்கழகத்தின் அதிகாரப்பூர்வ செய்திக்குறிப்பின்படி, கௌரவிக்கப்பட்ட விஞ்ஞானிகளில், முனைவர் எஸ்.ஹேமலதா, பேராசிரியர் மற்றும் புலதலைவர், உயிர் அறிவியல் துறை, முனைவர். அசோக் குமார் பாண்டுரங்கன் இணைப் பேராசிரியர், உயிர் அறிவியல் துறை, முனைவர். முபாரக் அலி தாவூத் பாஷா உதவிப் பேராசிரியர், உயிர் அறிவியல் துறை.

முனைவர். எஸ்.ஹேமலதா ஒரு புகழ்பெற்ற விஞ்ஞானி பசுமை மற்றும் மைக்கோனனோ தொழில்நுட்ப பயன்பா டுகள், எண்டோஃபைடிக் மைக்கோனனோ தொழில்நுட்பம் மற்றும் நுண்ணுயிர் எதிர்ப்பு ஆகியவற்றில் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப் பட்டவர்.முனைவர்.அசோக் குமார் பாண்டுரங்கன் புற்றுநோய் சிகிச்சை மற்றும் பெருங்குடல் அழற்சி தொடர்பான புற்றுநோய் ஆகியவற்றில் சர்வதேச நிபுணர். முனைவர்.முபாரக் அலி தாவூத் பாஷா அவர்கள் நானோபயோ மெட்டீரியல்ஸ் மற்றும் பயோமாஸ் மற்றும் பயோஎனர்ஜி துறையில் சர்வதேச நிபுணர் மற்றும் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்துள்ளார்.

இந்த குறிப்பிடத்தக்க சாதனைக்காகவும், அறிவியல் முன்னேற்றத்திற்கான அவர்களின் தொடர்ச்சியான அர்ப்பணிப்புக்காகவும், நிறுவனத்தின் நிர்வாகம், துணைவேந்தர், சார்பு துணைவேந்தர், பதிவாளர் மற்றும் பிற அதிகாரிகள் ஆசிரியர் உறுப்பினர்களுக்கு மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.



# "உங்களுடன் ஸ்டாலின்"முகாம்.,பாலவாக்கத்தில் அரவிந்த் ரமேஷ் எஸ்.வி. ரவிச்சந்திரன் பங்கேற்று ஆய்வு

சோழிங்கநல்லூர், செப்.27-

தல்வர்,மு.க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க, தமிழகம் முழுவதும் நடைபெற்று கொண்டிருக்கும் "உங்களுடன் ஸ்டாலின்" முகாம் வி.ஜி.பி. பூங்கா,183 வது வார்டு, பாலவாக்கம் (செப்:24) நடைபெற்றது. இம்முகாமினை சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ச.அரவிந்த் ரமேஷ், 14 ஆவது மண்டல குழுத் தலைவர் எஸ்.வி. ரவிச்சந்திரன் மற்றும் 15வது மண்டல குழுத் தலைவர்.,வி. இ.மதியழகன் ஆகியோர் முகாமில் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளை பார்வையிட்டு துறை ரீதியாக ஆய்வு செய்தனர். மேலும் முகாமில் பொதுமக்கள் அளித்த பல்வேறு விண்ணப்பங்களுக்கு உடனடியாக தீர்வு காணப்பட்டதுடன் அதற்கான சான்றிதழ்களை பயனாளிகளுக்கு வழங்கினர். நிகழ்வில் மாமன்ற உறுப்பினர்., டாக்டர். தமிழரசி சோமு, தலைமை செயற்குழு உறுப்பினர்., பாலவாக்கம்.க. சோமு உள்ளிட்ட அரசு அதிகாரிகள், தி.மு.க.நிர்வாகிகள் மற்றும் அணிகளின் நிர்வாகிகள் பங்கேற்றனர். பொது மக்கள், அரசு அலுவலர்கள் அனைவருக்கும் தேநீர், குடிநீர் பாட்டில்கள் மற்றும் அறுசுவை உணவும் மாமன்ற உறுப்பினர்., தமிழரசி சோமு செய்திரு ந்தது அனைவரும் பாராட்டும்படி அமைந்திருந்தது.மேலும் முகாமில் மாற்றுத்திறனாளிகள் எளிதாக பயன்பெறும் வகையில் மூன்று சக்கர வாகனங்களும் ஏற்பாடு செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# அனகாபுத்தூரில் மனிதநேய வணிகர் சங்கத்தின் செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றது



அனகாபுத்தூர், செப் .27-

செங்கல்பட்டு வடக்கு மாவட்டம் அனகாபுத்தூரில் மனிதநேய வணிகர் சங்கத்தின் செயல்வீரர்கள் கூட்டம்தமுமுக மனிதநேய மக்கள் கட்சி செங்கல்பட்டு வடக்கு மாவட்ட தலைவர் எஸ்.கே.ஜாகிர் உசேன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

சிறப்பு அழைப்பாளர்களாக மனிதநேய மக்கள் கட்சி மாநில துணை பொது செயலாளர் தாம்பரம் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் தாம்பரம் எம்.யாக்கூப் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

உடன் மாநிலச் செயலாளர் புதுமடம் ஏ.ஹலீம், மாநில அமைப்பு செயலாளர் வழக்கறிஞர் எஸ்.ஏ.புழல் ஷேக் முகம்மது அலி, மாநில வர்த்தக சங்க செயலாளர் ஏ.கௌவுஸ் பாஷா கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

தமுமுக செங்கல்பட்டு வடக்கு மாவட்ட துணைச் செயலாளர் ஏ.சௌக்கத் அலி வரவேற்புரை ஆற்றினார்கள்.

மமக மாவட்ட செயலாளர் எம்.அப்துல் ரஹீம், மாவட்ட பொருளாளர் எம்.சபியுல்லா, மாவட்ட துணைத் தலைவர் ஏ.என். அப்துல் ரகுமான், மாநில இளைஞரணி செயலாளர் எஸ்.தமிம் அன்சாரி, மக்கள் உரிமை மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அணி மாநில துணைச் செயலாளர் எஸ்.முகம்மது நயினார், தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் ஏ.முகம்மது ஜமீல் மாவட்டத் துணைச் செயலாளர் OKN. அப்துல் காதர், ஜமால்,மாவட்ட வணிகர் அணி செயலாளர் ஏ.அப்துல் முனாப், மாவட்ட வணிகர் அணி பொருளாளர் எஸ்.அசன் மற்றும் மாவட்ட, நகர, பகுதி, கிளை நிர்வாகிகள் மற்றும் பல்லாவரம் கண்ட்டோமென்ட் நகர வார சந்தை நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

மாவட்ட வணிகர் அணி துணைச் செயலாளர் அனகை எஸ்.சர்புதீன் நன்றி உரையாற்றுகிறார்கள்.

# சிவகங்கை மாவட்டத்தில் ஊர்க்காவலர் தேர்வு

சிவகங்கை, செப்.27-

சிவகங்கை மாவட்ட ஊர்க்காவல் படையில் காலியாக உள்ள 110 (79 ஆண் + 31 பெண்) ஊர்க்காவலர் பணியிடங்களை பூர்த்தி செய்ய ஏதுவாக, ஊர்க்காவலர் தேர்வு நடைபெற உள்ளது. எனவே ஊர்க்காவல் பணிக்கு சேர விருப்பமுள்ள, கீழ்காணும் தகுதியுடையவர்கள் விண்ணப்பிக்கலாம்.

i. பத்தாம் வகுப்பு படித்திருக்க வேண்டும்.

ii. 18 முதல் 50 வயதிற்குள் இருக்க வேண்டும்.

iii. நல்ல நடத்தை உள்ளவராக இருத்தல் வேண்டும்.

iv. சிவகங்கை மாவட்டத்தை பூர்விகமாக கொண்டு வசித்து வருபவராக இருக்க வேண்டும்.

V. உடற்தகுதி வாய்ந்தவராக இருக்க வேண்டும்.

2. 30.09.2025 ம் தேதி முதல் இதற்கான விண்ணப்பப் படிவத்தினை சிவகங்கை மாவட்ட ஆயுதப்படை வளாகத்தில் அமைந்துள்ள ஊர்க்காவல் படை அலுவலகத்தில் இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். மேலும் அவ்விண்ணப்பத்தினை முறையாக பூர்த்தி செய்து அதில் மார்பளவு புகைப்படம் (Passport Size) ஒட்டி 10.10.2025 தேதி முதல் 15.10.2025 தேதிக்குள் சிவகங்கை மாவட்ட ஊர்க்காவல் படை அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்

3. 15.10.2025 பிற்பகல் 5 மணிக்கு மேல் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

4. 04.11.2025 ம் நாள் காலை 07.00 மணிக்கு சிவகங்கை மாவட்ட ஆயுதப்படை மைதானத்தில். சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் உடற்தகுதித் தேர்வு நடைபெறும், இத்தேர்வில் அனைத்து விண்ணப்பதாரர்களும் தவறாது கலந்து கொள்ள வேண்டும்.

5. உடற்தகுதித் தேர்விற்கு வரும் விண்ணப்பதாரர்கள் அசல் கல்விச் சான்றுகள் மற்றும் அதற்கான நகல்களையும் கொண்டு வர வேண்டும்

சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம்.



## கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை 71வது நினைவு தினத்தையொட்டி மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் அன்னாரது திருவுருவ சிலைக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்

கன்னியாகுமரி, செப்.27-

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் 27.07.1876ஆம் ஆண்டு பிறந்தார். 26.09.1954 ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்கள். அன்னாரது பணியினை நினைவு கூறும் வகையில் கன்னியாகுமரி மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் ஒவ்வொரு வருடமும் பிறந்த நாள் மற்றும் நினைவு நாள் அன்று மரியாதை செலுத்தப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் 71வது நினைவு நாளையொட்டி, மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் சுசீந்திரம் கிராம நிர்வாக அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.பா.ஜாண் ஜெகத் பிரைட், அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் திரு.கந்தசாமி, உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) திருமதி.செல்வலெட் சுஷ்மா, சுசீந்திரம் பேரூராட்சி தலைவர் திருமதி. அனுஷ்யா, சுசீந்திரம் பேரூராட்சி துணைத்தலைவர் திரு.சுப்பிரமணியபிள்ளை, வருவாய் ஆய்வாளர் திருமதி.பிரேமகீதா, கிராம நிர்வாக அலுவலர் செல்வி. வளர்மதி, பேரூராட்சி உறுப்பினர்கள் திரு.காசி, திரு.தாணுமாலையபெருமாள், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.



# மேடவாக்கத்தில் காயிதே மில்லத் ஆடவர் கல்லூரில் நடத்திய மாபெரும் மருத்துவ முகாமில் 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயன்பெற்றனர்

மேடவாக்கம், செப்.27-

சென்னை மேடவாக்கத்தில் காயித்தே மில்லத் கல்லூரியின் 50வது ஆண்டு பொன்விழாவை முன்னிட்டு மாபெரும் மருத்துவ முகாம் நடைப்பெற்றது. முகாமிற்கு கல்லூரி செயலாளர் தாவூத் மியாத்கான் தலைமை தாங்கினார். கல்லூரி முதல்வர் அம்துல் தவாப் மருத்துவமுகாமினை தொடங்கி வைத்தார்.

இதில் மருத்துவ முகாமில் பொதுமருத்துவம், பல் மருத்துவம் மற்றும் கண் சிகிச்சை மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. மேலும் இலவச உயர் சிகிச்சைக்காக மருத்திவமனைக்கும் பரிந்துரைக்கப்பட்டனர்.

இதில் 500க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவ, மாணவியர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் என கலந்து கொண்டு பயன்பெற்றனர். இந்த நிகழ்ச்சியில் துணை முதல்வர்கள் கல்லூரி பேராசிரியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





# புதிய கட்டிடம் திறப்பு விழா

சிவகங்கை, செப்.27-

சிவகங்கையிலுள்ள மாவட்ட மைய நூலகத்தில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டிடத்தினை தமிழக முதல்வர் காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார். அதனை தொட.ர்ந்து புதிய கட்டிடத்தில் மாவட்ட நூலக அலுவலர் தர்மர் குத்து விளக்கு ஏற்றி புதிய கட்டிடத்தினை வாசகர்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார்..

இந்நிகழ்ச்சியில் மாவட்ட நூலக அலுவலர் வெங்கடவேல்பாண்டி நூலகர்கள் முத்துக் குமார், சாந்தி வாசகர் வட்டத்தலைவர் அன்புத்துரை, அனந்தராமன், கோவிந்தன். உள்ளிட்ட பலரும் லந்து கொண்டனர்.



■ மதுரை கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியம் பட்டூர்,கம்பூர்,கேசம் பட்டி,சேக்கிபட்டி ஆகிய ஊராட்சிகளுக்கு நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமில் வட்டார வளர்ச்சி அலுவலர் செல்ல பாண்டியன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் சிவக்குமார்,ஊராட்சி செயலாளர் சேரலாதன்,சேகர்,சோபியா பானு,வடிவேல் ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களிடம் மனுக்களை பெற்றனர்.முகாமில் கொட்டாம்பட்டி திமுக மேற்கு ஒன்றிய செயலாளர் ராஜா உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161